# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No.93/2018. நாள்.01.09.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **ஜெயபால்** | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | |

**<u>பி.சா. 2 ஆஜர். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் B.Sc., படிதுள்ளேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. வழக்கின் பிரதிவாதி கோடீஸ்வரன் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார்கள், இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள வழக்கு விவரங்கள் யார் சொல்லி தெரியும் என்றால் வழக்கறிஞர் சொல்லிதான் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வழக்கின் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V
SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.